# தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்
# TAMILNADU TEACHERS EDUCATION UNIVERSITY
(Established under Tamil Nadu Act 33 of 2008)
**UGC 12(B) Status and Accredited with 'A' Grade(CGPA 3.17) by NAAC (1st Cycle)**
Gangaiamman Koil Street, Karapakkam, Chennai – 600 097.
(Adjacent to Govt. High School, Karapakkam Bus Stop: Karapakkam)
Website: www.tnteu.ac.in


**No.TNTEU/R/QA/2025/ 01201** **Date: 11.08.2025**


**Dr.K.Rajasekaran, Ph.D.**
**Registrar i/c**


## <u>சுற்றறிக்கை</u>

பொருள்: **TNTEU** – இப்பல்கலைக்கழக இணைவு பெற்ற அனைத்து கல்வியியல் கல்லூரிகள் - ஆசிரியர்களின் விவரங்களை ஆதார் உடன் இணைக்கப்பட்டு, தரவுகள் இணையத்தில் வழங்க வழிவகை செய்ய வேண்டுதல் - தேதி நீட்டிதல் - தொடர்பாக.

பார்வை: 1. அரசு செயலாளர், உயர்கல்வித்துறை அவர்களின் நேர்முக கடிதம்.
2. கல்லூரிக் கல்வி ஆணையர், கல்லூரிக் கல்வி இயக்ககம் அவர்களின் கடிதம்.
3. இப்பல்கலைக்கழக சுற்றறிக்கை எண்.TNTEU/R/QA/2025/01140 Date29.07.2025

-----

பார்வை 3-ல் கண்ட இப்பல்கலைக்கழக சுற்றறிக்கை வாயிலாக, இப்பல்கலைக்கழக கட்டுப்பாட்டின் கீழுள்ள அனைத்து கல்வியியல் கல்லூரிகளின் (Government/Government-Aided/Self-Finance) முதல்வர்கள் மற்றும் அனைத்து ஆசிரியர்கள் விவரங்களை இத்துடன் இணைக்கப்பட்டுள்ள எக்செல் தாள் படிவத்தில் (Excel Sheet) நிரப்பி, அதனை **qa@tnteu.ac.in** என்ற மின்னஞ்சல் முகவரிக்கும் மற்றும் நிரப்பபட்ட எக்செல் தாள் (Hard copy)-னை தபால் வாயிலாக பல்கலைக்கழகத்திற்கு 08.08.2025-ம் தேதிக்குள் தவறாமல் அனுப்பிட அறிவுறுத்தப்பட்டது.

ஆனால், இது தொடர்பாக ஒரு சில கல்லூரிகள் தேதி நீட்டிக்க கேட்டுக்கொண்டதின் காரணமாக பணியாளர் ஒப்புதல் தரவுகள் எக்செல் தாள் படிவத்தில் (Excel Sheet) நிரப்பி, அதனை **qa@tnteu.ac.in** என்ற மின்னஞ்சல் முகவரிக்கும் மற்றும் நிரப்பபட்ட எக்செல் தாள் (Hard copy)-னை தபால் வாயிலாக பல்கலைக்கழகத்திற்கு **20.08.2025**-ம் தேதிக்குள் அனுப்புமாறு தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

### <u>வழிமுறைகள்:</u>

*1. இப்பல்கலைக்கழக ஒப்புதல் பெற்ற கல்லூரி முதல்வர் மற்றும் ஆசிரியர்கள் பெயர்களை மட்டும்* ***எக்செல் தாள் படிவத்தில் (Excel Sheet)*** *-ல் நிரப்பவேண்டும்.*

*2. எக்காரணம் கொண்டும் ஒப்புதல் பெறாத முதல்வர் மற்றும் ஆசிரியர்கள் பெயர்களை Excel Sheet-ல் நிரப்பக் கூடாது.*

*3. Excel Sheet-ல் நிரப்பிய தரவுகளை* (Hard copy) *தபால் வாயிலாக அனுப்ப வேண்டும். இத்துடன் பல்கலைக்கழகத்தில் வழங்கிய பணியாளர் ஒப்புதல் ஆணை (Staff Approval Order) மற்றும் Annexure -III நகல்கள் கட்டாயம் இணைத்து அனுப்பவேண்டும்.*

*4. பணியாளர் ஒப்புதல் ஆணை (Staff Approval Order) இல்லாமல் Annexure -III மட்டும் அனுப்பக் கூடாது.*

மேற்கண்ட வழிமுறைகளை பின்பற்றி *Excel Sheet-ல் தகவல்கள்* அனுப்பப்படாத கல்லூரிகளுக்கு 2025-2026-ம் கல்வியாண்டிற்கான மாணவர் சேர்க்கைக்கு அனுமதி வழங்கப்படாது. மேலும், இப்பல்கலைக்கழக கட்டுப்பாட்டின் கீழுள்ள அனைத்து கல்வியியல் கல்லூரிகளின் ஆசிரியர் விபரங்களை ஆதார் எண்ணுடன் கல்லூரியின் இணையதளத்தில் பதிவேற்றிட கல்லூரி தாளாளர்கள்/செயலாளர்கள்/முதல்வர்கள் அவர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

K. R.

**பதிவாளர்**(பொ)

பெறுநர்

தாளாளர்/செயலாளர் /முதல்வர்

TNTEU இணைவு பெற்ற அனைத்து கல்வியியல் கல்லூரிகள்